සබරගමුව පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
**சபரகமுவ மாகாண கல்வித் திணைக்களம்**
Sabaragamuwa Provincial Department of Education

| | |
|---|---|
| **පළමු වාර පරීක්ෂණය 2018** | **11 ශ්‍රේණිය** |
| முதலாம் தவணைப் பரீட்சை **2018** | தரம் **11** |
| **First Term Test 2018** | **Grade 11** |

| | | |
|---|---|---|
| **දෙමළ භාෂාව හා සාහිත්‍යය** | **III** | **පැය දෙකයි** |
| **தமிழ் மொழியும் இலக்கியமும்** | **III** | **இரண்டு மணித்தியாலம்** |
| **Tamil Language & Literature** | **III** | ***Two hours*** |

**கவனிக்க:-**

***1) அறிவுறுத்தலுக்கேற்ப ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.***
***2) 1,2,3,4, ஆகிய வினாக்களுக்கும் 5,6,7 ஆகிய வினாக்களில் ஏதாவது ஒரு வினாவுக்கு விடை எழுதுக.***
***3) இவ்வினாத்தாளுக்குரிய புள்ளிகள் 80 ஆகும்.***

01. சுருக்கமான விடை தருக.

1. நீதிப்பாடல்கள் என்றால் என்ன?

2. ‘‘தெள்ளியவாலின் சிறு பழத் தொரு விதை
   தெண்ணீர் கயத்துட் சிறு மீன் சினையினும்……’’
   அ) இக்கூற்று இடம் பெற்ற நூல் எது?
   ஆ) தெண்ணீர் கயம் என்பதன் பொருள் யாது?

3. ‘‘எட்டுணையாயினும் இரவாது தான் ஈதல் ……..’’
   அ) இக்கூற்று இடம் பெற்ற நூலின் ஆசிரியர் யார்?
   ஆ) இக்கூற்றின் சிறப்பு யாது?

4. ‘‘பொழிந்த நெய்யாகுதி வாய்வழி பொங்கி …….’’
   அ) இது எவ்விலக்கியத்தில் வந்துள்ளது?
   ஆ) இவ்வரிகளினூடாக யாருடை எழுச்சி கூறப்பட்டுள்ளது?

5. ‘‘தேனருவி திரையெழுப்பி வானின்வழி யொழுகும்
   செங்கதிரோன் பரிகாலும் தேர்காலும் வழுக்கும்………..’’
   அ) இவ்வரிகளினூடாக உணர்த்தப்படும் சிறப்பு யாது?
   ஆ) இதில் இடம் பெற்ற அணி யாது?

6. படரெலாம் படைத்தாளைப் பழி வளர்க் குஞ்
   செவிலியைத்தன் பாழ்த்த பாவிக்………..’’
   அ) இக்கூற்றில் குறிப்பிடப்பட்டவர் யார்?
   ஆ) இக்கூற்று இடம் பெற்ற நூல் எது?

7. ‘‘ஏதிலார் ஆரத் தமர் பசிப்பர் பேதை
   பெரும் செல்வம் உற்றக் கடை…..’’
   அ) இங்கு குறிப்பிடப்பட்ட பேதையின் செயல் என்ன?
   ஆ) ‘‘தமர்’’ என்பதன் பொருள்

8. ‘‘நரகம் புகினும் எள்ளேன்
திருவருளா யிருக்கப் பெறினிறைவா’’
அ) இவ்வடிகளின் பொருள் யாது?
ஆ) இதனை கூறியவர் யார்?

9. ‘‘மட்டுருக் காலை அருவாளு மடித்து
மாவிலங்கன் பிடி சீவி யிறுக்கி’’
அ) இது எவ்வகையான நாட்டார் பாடல்?
ஆ) மாவிலங்கம் என்பது யாது?

10. ‘‘அவன் ஒரு பார்வையில் எண்ணும் அட்சய இருதயம்’’ கலையை படித்து இருந்தான்
அ) அட்சய இருதயக் கலையை படித்தவன் யார்?
ஆ) அவருக்கு தேர்ப்பாகனாக பணிபுரிந்தவர் யார்?

(20 புள்ளிகள்)

02. பின்வரும் செய்யுட் பகுதிகளையும் உரைநடைப் பகுதிகளையும் வாசித்து அவற்றின் கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

1. உப்பிலாக் கஞ்சியினை யுண்ணு மறுசுவை போல்
தப்பிய கந்தைபீதாம்பரம் போல் - ஒப்பும்
பனையோலைப் பாயிற் படுத்துறங்கும் வாழ்வார்
மனங் கொண் டது மாளிகை
அ) இச்செய்யுளில் மனத்திருப்தி காட்டப்பட்டுள்ள விதம் யாது?
ஆ) பீதாம்பரம் என்ற பதத்தின் பொருள் யாது?

2. கழியும் பிழைபொருட் டள்ளி நன்னூலாங் கடலினுண்டு
வழியும் பொதிகை வரையினிற் கால் கொண்டு வண்கவிதை
மொழியும் புலவர் மனத்தே யிடித்து முழங்கி மின்னிப்
பொழியும் படிக்குக் கவிகாள மேகம் புறப்பட்டதே
அ) காளமேக புலவரின் கவிச் சிறப்பு யாது?
ஆ) இதில் இடம் பெற்ற அணியை விளக்குக?

3. தச்சன் செய்த சிறுமா வையம்
ஊர்ந்துஇன் புறாஅர் ஆயினும் கையின்
ஈர்ந்துஇன் புறூஉம் இளையோர் போல்
உற்றுஇன் புறேஎம் ஆயினும் நற்றேர்ப்
பொய்கை ஊரன் கேண்மை
செய்துஇன் புற்றனெம் செறிந்தன வளையே
அ) இங்கு குறிப்பிட்ட தலைவியின் மனநிலையை தருக.
ஆ) ‘‘செறிந்தன வளையே’’ என்பதன் கருத்து யாது?

4. சமூகத்திலுள்ள பலர் தத்தம் இயல்புக்கேற்ற இலட்சியங்களைக் கடைப்பிடித்தொழுகுவதாலோ, கடைபிடித்தொழுக முயல்வதாலோ தான் உலகம் இனிமை தருகின்றது. இலட்சியமில்லையேல் உலகு இனிமை தராது. பண்பில்லாதவனுக்கு அவன் பெற்ற அறிவும் துன்பமாம். ஈகையில்லாதவனுக்கு அவன் பெற்ற செல்வமுந் துன்பமாம். பிற நற்பேறுகளும் இவ்வாறே சமூகத்தை உருவாக்கி அதனை அழகு செய்து இன்பப் பயன் காணச் செய்கின்ற இலட்சியம் சமூகமாகிய உடலுக்கு உயிராக அமைந்துள்ளது. மனித வர்க்கத்தின் தேம்பாவணியும் இலட்சியமே?
அ) இப்பந்தியில் இலட்சியம் பற்றி குறிப்பிட்டவைகளை விளக்குக.
ஆ) பண்பும் ஈகையுமில்லாதவனின் நிலை யாது?

5. இப்போது சினிமா மொழி நமக்குப் பரிச்சயமில்லாத ஒன்றாக இருக்கிறது. மற்ற நாடுகளில் இம்மொழி வளர்ந்து கொண்டிருக்கிறது. அங்கிருந்து வரும் நல்ல சினிமாவை நாம் அனுபவிக்க முடியாததற்கு நம் பரிச்சயமின்மை தான் காரணம். சினிமா மொழி, மொழி பெயர்க்க முடியாத ஒன்று. அது மனித குலத்திற்கே பொதுவானது. அது தான் சினிமாவின் சக்தியும் கூட. சினிமாவைப் பற்றி இந்த விழிப்பு ஏற்படாத வரை நாம் சினிமாவை புலனளவில் மட்டுமே அணுகுவோம். அறிவுபூர்வமாகவும் அணுக வேண்டும். அந்த அனுபவம் ஆழமானதொன்றாக அமைய வேண்டும்.

அ) சினிமா மொழியின் பண்புகள் எவை?

ஆ) சினிமாவை புலனளவில் மட்டும் அணுகுவதற்கான காரணம் யாது?

(20 புள்ளிகள்)

03. நாவலர் எழுந்தார் எனும் கட்டுரையில்

அ) நாவலரின் தோற்றப் பொழிவும், சோர்வுக்கான காரணமும்

ஆ) பிற்றோவின் நேர்மையற்ற செயல் என்பன

எடுத்துரைக்கப்பட்டிருக்கும் விதத்தினை விளக்குக.

அல்லது

குகப்படலத்தில்

அ) பரதன் கோசலையை குகனுக்கு அறிமுகப்படுத்தியமை

ஆ) கைகேயின் குணப்பண்புகள் என்பன

எடுத்துரைக்குமாற்றினை விளக்குக.

(15 புள்ளிகள்)

04. தத்தைவிடு தூது என்னும் பாடற்பகுதியில்

அ) கிளி உறையும் சூழல் பற்றிய வர்ணனை

ஆ) பெண்களுக்கு கல்வி அவசியம் என்பதற்கு கவிஞர் முன் வைக்கும் காரணங்களை எடுத்துக் கூறுக.

அல்லது

நீதி நூல்கள் சிறந்த நீதிக் கருத்துக்களை தருகின்றன. இக்கூற்றை இரண்டு நீதி நூல்களை ஆதாரமாகக் கொண்டு விளக்குக.

(15 புள்ளிகள்)

5,6,7 ஆகிய வினாக்களுள் ஏதாவது ஒன்றைத் தெரிவு செய்து விடை எழுதுக.

05. நாட்டார் பாடல்களை ஆதாரமாகக் கொண்டு

அ) உழவுத் தொழிலின் முக்கியத்துவம்

ஆ) அரிவி வெட்டும் பாடலின் சிறப்பு

புலப்படுத்தப்பட்டிருக்கும் விதத்தை விளக்குக.

06. கம்பியூட்டர் என்ற பாடத்தின் ஊடாக

அ) கம்பியூட்டர் பற்றிய வர்ணனை

ஆ) ஆசிரியரின் மொழிநடை

சித்தரிக்கப்பட்டிருக்கும் விதத்தினை விளக்குக.

07. பேதைமை என்ற அதிகாரத்தில்

அ) பேதைமையாளரின் கையில் சேரும் செல்வத்தின் நிலையும்

ஆ) அணிச் சிறப்பு கையாளப்பட்டிருக்கும் விதத்தினையும் விளக்குக.

(10 புள்ளிகள்)